## <u>மாவட்ட   உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி</u>

**முன்னிலை:**–திரு.G.பாண்டியராஜன், B.Com.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
கொடுமுடி.

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி மாதம் 13ம் நாள்
2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.21/2023</u>**
**<u>CNR No. TNED13-002570-2023</u>**

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,
சிவகிரி காவல் நிலையம்,
(குற்ற எண்.69/2023) – குற்ற முறையீட்டாளர்

//எதிராக//

சதீஷ், வயது 26/2023, த/பெ.ஆறுமுகம்,
4/38 குந்தன் தெரு,
கே.மேட்டுப்பாளையம், காவேரிபட்டி,
அக்ரஹாரம், சேலம் மாவட்டம். – எதிரி

| **வரிசை எண்** | **விளக்கம்** | **விவரங்கள்** | |
|---|---|---|---|
| 1. | சம்பவம் நடந்த நாள் | 30.04.2023 | |
| 2. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 30.04.2023 | |
| 3. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 03.05.2023 | காவல்நிலைய பிணையில் சென்ற நாள் 03.05.2023 |
| 4. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 19.06.2023 | |
| 5. | குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 16.08.2023 | |

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.27 17:28:26 +0530

<table>
<tr><td>6.</td><td>கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">கு.வி.மு.ச.பிரிவு 294(3)ன் கீழான மனு எம்.பி.எண்.6/2026 உத்தரவு நாள் 29.01.2026 – அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td rowspan="15">7.</td><td rowspan="15">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>10.09.2025</td><td>10.09.2025</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>10.09.2025</td><td>10.09.2025</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>10.09.2025</td><td>10.09.2025</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>22.09.2025</td><td>22.09.2025</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>22.09.2025</td><td>– இல்லை –</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>22.09.2025</td><td>– இல்லை –</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>22.09.2025</td><td>22.09.2025</td></tr>
<tr><td>அ.சா.8</td><td>22.09.2025</td><td>22.09.2025</td></tr>
<tr><td>அ.சா.9</td><td>09.10.2025</td><td>09.10.2025</td></tr>
<tr><td>அ.சா.10</td><td>16.10.2025</td><td>– இல்லை –</td></tr>
<tr><td>அ.சா.11</td><td>16.10.2025</td><td>– இல்லை –</td></tr>
<tr><td>அ.சா.12</td><td>03.11.2025</td><td>03.11.2025</td></tr>
<tr><td>அ.சா.13</td><td>03.11.2025</td><td>03.11.2025</td></tr>
<tr><td>அ.சா.14</td><td>29.01.2026</td><td>29.01.2026</td></tr>
<tr><td>8.</td><td>எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள்</td><td colspan="3">04.02.2026</td></tr>
<tr><td rowspan="2">9.</td><td rowspan="2">எதிரிமீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்</td><td colspan="2">பிடியாணை வழங்கப்பட்ட நாள்</td><td>பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள்</td></tr>
<tr><td colspan="2">– இல்லை –</td><td>– இல்லை –</td></tr>
<tr><td>10.</td><td>வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள்</td><td colspan="3">02.03.2026</td></tr>
<tr><td>11.</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td colspan="3">27.03.2026</td></tr>
</table>

இவ்வழக்கு 21.06.2023ம் தேதி சி.சி.எண்.21/2023 என்ற எண்ணில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, வழக்கு இறுதியாக 02.03.2026ம் தேதி என் முன்பு விசாரணைக்கு வந்தபொழுது குற்றம் முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை I அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.கார்த்திகேயன் அவர்கள்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:28:31 +0530

ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்புரை</u>

இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 279, 304–Aன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஆகும்.

1. **<u>சிவகிரி காவல் ஆய்வாளர் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:–</u>**

சிவகிரி காவல்நிலைய சரகத்திற்குட்பட்ட சிவகிரி கருக்கம்பாளையத்தை சேர்ந்த சாட்சி 1ன் கணவர் முத்துவீரன் என்பவர் 30.04.2023ம் தேதி காலை 10.00 மணி சுமாருக்கு சின்னியம்பாளையம் காலனி அருகில் விளக்கேத்தி – கொடுமுடி செல்லும் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ரோட்டின் இடதுபுற ஓரமாக நடந்து சென்றுகொண்டிருந்தபோது எதிரி JCB TN 86 F 4078 என்ற வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் மற்றும் கவன குறைவாகவும் ஓட்டி சென்று சம்பவ இடத்தில் ரோட்டின் இடதுபுறம் நின்று கொண்டிருந்த TATA ACE TN 54 X 2439 என்ற வண்டியின் பின்னால் வேகமாக மோதியதில் TATA ACE என்ற வண்டி வேகமாக முன்னோக்கி சென்று மேற்படி வாகனத்திற்கு முன்னால் நடந்து சென்ற முத்துவீரன் என்பவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில் தலையின் வலது பக்கமும், இடது கால் முழுங்கல், வலது கால் பாதம் ஆகிய இடங்களில் காயத்தை ஏற்படுத்தி மரணத்தை ஏற்படுத்தியுள்ளார். எனவே எதிரி இ.த.ச. பிரிவுகள் 279, 304–Aன் கீழ் குற்றம்புரிந்துள்ளதாக சிவகிரி காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>வழக்கை புலன் கொண்டு எதிரியை அழைத்தல்</u>:**

மேற்படி இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் ஆய்வு செய்து இ.த.ச.பிரிவுகள் 279, 304–Aன் கீழ் புலன் கொள்ளக் கூடிய முகாந்திரம் இருந்ததால் இவ்வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் எதிரிக்கு அரசு தரப்பு ஆவணங்களின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:28:35 +0530

3. **<u>எதிரியின் கோரிக்கை</u>**:

வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரி குற்றம் புரிந்திருப்பதற்கான முகாந்திரம் இருந்ததால் எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு இ.த.ச.பிரிவுகள் 279, 304–A ன் கீழான குற்றம் குறித்து எதிரியிடம் வினவியபோது குற்றத்தை எதிரி மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சியத்திற்காக உத்தரவிடப்பட்டது.

4. **<u>வழக்கு விசாரணை</u>**:

அரசு தரப்பில் குறிப்பிட்டிருந்த பட்டியல் சாட்சிகளில் பட்டியல் சாட்சிகள் 9, 13, 14 ஆகிய 3 நபர்கள் தவிர்த்து அ.சா.1 முதல் அ.சா.14 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

5. **<u>அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்</u>**:–

(I) **வழக்கின் புகார்தாரரான பழனியம்மாள் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில்** முத்துவீரன் தனது கணவர் என்றும், 30.04.2023ம் தேதியன்று தனது கணவர் முத்துவீரன் சிவகிரி, சின்னியம்பாளையத்தில் உள்ள மருத்துவமனைக்கு மருந்து வாங்குவதாக சொல்லிவிட்டு நடந்து சென்றதாகவும், சிவகிரி சின்னியம்பாளையத்திற்கு அருகில் தனது கணவர் முத்துவீரன் நடந்து சென்றுகொண்டிருந்தபோது ரோடு ஓரத்தில் டாடா ஏஸ் நான்கு சக்கர வாகனம் நின்று கொண்டிருந்ததாகவும், அதன் மீது பொக்கலைன் ஜே.சி.பி மோதி டாடா ஏஸ் வண்டி தனது கணவர் மீது மோதி விபத்து நடந்ததாகவும், சம்பவ இடத்தில் இருந்த மாரிமுத்து, பழனிச்சாமி ஆகியோர்கள் போன் மூலம் தனக்கு விபத்து பற்றி தகவல் சொன்னார்கள் என்றும், தான் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று தனது கணவர் முத்துவீரனை பார்த்தபோது தனது கணவர் முத்துவீரனுக்கு தலை, இரண்டு கால்களிலும், தொடை பகுதிகளிலும் காயங்கள் இருந்ததாகவும், மேல் சிகிச்சைக்காக தனது கணவர் முத்துவீரனை ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், அன்றைய தினமே தனது கணவர் முத்துவீரன் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் இறந்துவிட்டதாகவும், விபத்து பற்றி தான் சிவகிரி காவல்நிலையத்தில் **அ.சா.ஆ.1 புகார்** செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.27 17:28:39 +0530

(ii) **அ.சா.2 மாரிமுத்து தனது சாட்சியத்தில்** 30.04.2023ம் தேதியன்று காலை சுமார் 10.00 மணியளவில் சின்னியம்பாளையம், காலனிக்கு எதிரில் உள்ள முருகன் டீக்கடையில் தானும், பழனிச்சாமியும் டீ சாப்பிட்டு கொண்டிருந்தபோது முத்துவீரன் என்பவர் விளக்கேத்தியில் இருந்து கொடுமுடி செல்லும் ரோட்டில் கிழக்கு நோக்கி சின்னியம்பாளையம், காலனி அருகே நடந்து வந்து கொண்டிருந்தபோது சின்னியம்பாளையம், காலனிக்கு எதிரே டாடா ஏஸ் நான்கு சக்கர வாகனம் நின்றுகொண்டிருந்ததாகவும், அதில் பிளாஸ்டிக் பொருட்களை வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தார்கள் என்றும், மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி ஒரு ஜே.சி.பி வாகனம் பயங்கர வேகமாக வந்து நின்று கொண்டிருந்த டாடா ஏஸ் வண்டியின் மீது மோதியதால் அந்த டாடா ஏஸ் வாகனம் நடந்து சென்று கொண்டிருந்த முத்துவீரன் மீது மோதிவிட்டதாகவும், விபத்தின் காரணமாக முத்துவீரனுக்கு தலை மற்றும் இரண்டு கால்களிலும் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், விபத்து பற்றி முத்துவீரன் மனைவி சிவகிரி காவல்நிலையத்தில் புகார் செய்ததாகவும், முத்துவீரனை முதலில் சிவகிரி அரசு மருத்துவமனைக்கும் பின்னர் மேல்சிகிச்சைக்காக ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கும் கொண்டு சென்றார்கள் என்றும், அன்றைய தினமே இரவு சுமார் 12.30 மணியளவில் முத்துவீரன் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் இறந்துவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**(iii) அ.சா.3 பழனிச்சாமி தனது சாட்சியத்தில்** 30.04.2023ம் தேதியன்று காலை சுமார் 10.00 மணியளவில் சிவகிரி சின்னியம்பாளையம் காலனியில் உள்ள முருகன் டீக்கடையில் தானும், மாரிமுத்துவும் டீ சாப்பிட்டு கொண்டிந்ததாகவும், தங்களுக்கு தெரிந்த முத்துவீரன் என்பவர் அந்த டீக்கடை வழியாக நடந்து சென்று கொண்டிந்ததாகவும், முத்துவீரன் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி ரோட்டின் இடது புற ஓரமாக நடந்துசென்று கொண்டிந்தபோது சிவகிரி சின்னியம்பாளையம், காலனி அருகே டாடா ஏஸ் நான்கு சக்கர வாகனம் பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்வதற்காக நின்றுகொண்டிருந்தபோது ஜே.சி.பி. வண்டி மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வேகமாக வந்து டாடா ஏஸ் வண்டியின் மீது மோதியதாகவும், அதனால் டாடா ஏஸ் வண்டி முத்துவீரனின் மீது மோதிவிட்டதாகவும், விபத்தை தானும், மாரிமுத்துவும்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:28:44 +0530

நேரில் பார்த்ததாகவும், முத்துவீரனுக்கு தலையிலும், இடது கால், வலது கால் பாதத்தில் பலத்த அடிபட்டு ரத்த காயம் இருந்ததாகவும், காயம் பட்ட முத்துவீரனை 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிவகிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், பின்பு மேல்சிகிச்சைக்காக முத்துவீரனை ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், அன்றைய தினம் இரவு சுமார் 12.30 மணியளவில் முத்துவீரன் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் இறந்துவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(iv) **அ.சா.4 மலைச்சாமி தனது சாட்சியத்தில்** தன்னுடைய டாடா ஏஸ் வண்டியின் பதிவு எண் தற்போது தனக்கு ஞாபகமில்லை என்றும், எதிரியை தனக்கு ஞாபகமில்லை என்றும், 30.04.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு தான் தனது டாடா ஏஸ் வண்டியில் சிவகிரியில் இருந்து சாலைப்புதூர் நோக்கி வீட்டுக்கு வந்து கொண்டிருந்ததாகவும், சிவகிரி, சின்னியம்பாளையம் அருகில் தான் ரோட்டில் வந்தபோது ரோட்டை குறுக்காக ஒரு நபர் தனது வாகனத்திற்கு முன்னால் வந்ததாகவும், தான் அவர் அடிபடாமல் இருக்க வேண்டி தனது டாடா ஏஸ் வண்டியை இடதுபுறமாக நிறுத்திவிட்டதாகவும், தனக்கு பின்னால் வந்த ஜேசிபி வண்டி தனது டாடா ஏசின் மீது மோதி தனக்கு முன்னால் சென்ற நபரின் மீது மோதிவிட்டதாகவும், அந்த ஜேசிபி வாகனத்தின் பதிவு எண் தெரியாது என்றும், அதை ஓட்டி வந்த நபரைப் பற்றியும் 3 வருடம் ஆனதால் எனக்கு ஞாபகமில்லை என்றும், அடிபட்ட நபர் மருத்துவமனையில் இறந்துவிட்டதாக சொன்னார்கள் என்றும் கூறி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

(v) **அ.சா.5 பாலகிருஷ்ணன் தனது சாட்சியத்தில்** 30.04.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு தனது வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது வீட்டிற்கு வெளியில் சத்தம் கேட்டதாகவும், தான் வீட்டிற்கு வெளியே வந்து பார்த்ததாகவும், ஒரு ஜேசிபி வாகனம் ஒரு வேப்ப மரத்தின் மீது மோதியிருந்தது என்றும், பாத்திரம் விற்கும் டாடா ஏஸ் வாகனமும் சம்பவ இடத்தில் இருந்தது என்றும், ஒரு நபருக்கு பின்தலை, கால், தொடை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்ததாகவும், அந்த நபரை 108

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:28:49 +0530

ஆம்புலன்ஸ் மூலமாக சிவகிரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(vi) **அ.சா.6 நித்யா தனது சாட்சியத்தில்** 30.04.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு தனது வீட்டில் இருந்தபோது வீட்டிற்கு வெளியில் சத்தம் கேட்டதாகவும், தான் வீட்டிற்கு வெளியே வந்து பார்த்ததாகவும், ஒரு ஜேசிபி வாகனம் ஒரு வேப்ப மரத்தின் மீது மோதியிருந்ததாகவும், பாத்திரம் விற்கும் டாடா ஏஸ் வாகனமும் சம்பவ இடத்தில் இருந்ததாகவும், ஒரு நபருக்கு பின்தலை, கால், தொடை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்ததாகவும், அந்த நபரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிவகிரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**(vii) அ.சா.7 குமார் தனது சாட்சியத்தில்** 30.04.2023ம் தேதி தனது அப்பா முத்துவீரன் காலை 10.00 மணிக்கு சின்னியம்பாளையம் காலணி அருகில் ரோட்டில் நடந்து சென்றபோது ஒரு ஜேசிபி வாகனம் டாடா ஏஸ் வாகனத்தின் மீது மோதி அதன் காரணமாக தன் அப்பா மீது மோதியதாக சம்பவ இடத்தில் இருந்து மாரிமுத்து மற்றும் பழனிச்சாமி ஆகியோர்கள் தகவல் சொன்னதாகவும், அதன் பேரில் தான் சிவகிரி அரசு மருத்துவமனை சென்று தனது அப்பாவை பார்த்ததாகவும், தனது அப்பா முத்துவீரனுக்கு பின் தலை, கால், தொடை, வலது காலிலும் அடிபட்டிருந்ததாகவும், அவரை மேல்சிகிச்சைக்காக ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், தனது அப்பா அன்றைய தினமே பகல் 12.30 மணிக்கு மருத்துவமனையில் இறந்துவிட்டதாகவும், விபத்து பற்றி தனது அம்மா பழனியம்மாள் சிவகிரி காவல் நிலையத்தில் புகார் செய்திருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(viii) **அ.சா.8 மகேந்திரன் தனது சாட்சியத்தில்** விபத்தில் இறந்துபோன முத்துவீரன் தனது நெருங்கிய உறவினர் என்றும், 30.04.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு சின்னியம்பாளையம் காலணி அருகில் ரோட்டில் நடந்து சென்றபோது ஒரு ஜேசிபி வாகனம் டாடா ஏஸ் வாகனத்தின் மீது மோதி அதன் காரணமாக முத்துவீரன் மீது மோதியதாக சம்பவ இடத்தில் இருந்து தனது அத்தை பழனியம்மாள் தகவல்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:28:57 +0530

சொன்னதாகவும், தான் சிவகிரி அரசு மருத்துவமனை சென்று முத்துவீரனை பார்த்ததாகவும், முத்துவீரனுக்கு பின் தலை, கால், தொடை, வலது காலிலும் அடிபட்டிருந்ததாகவும், அவரை மேல்சிகிச்சைக்காக ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், அவர் அன்றைய தினமே பகல் 12.30 மணிக்கு மருத்துவமனையில் இறந்துவிட்டதாகவும், விபத்து பற்றி தனது அத்தை பழனியம்மாள் சிவகிரி காவல் நிலையத்தில் புகார் செய்திருந்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(IX) **அ.சா.9 வீரன் தனது சாட்சியத்தில்** 30.04.2023ம் தேதியன்று மாலை சுமார் 05.30 மணியளவில் சிவகிரி சின்னியம்பாளையம் தனது வீட்டிற்கு அருகில் போலீசார் ஒரு விபத்து வழக்கு சம்பந்தமாக வரைபடம் போட்டு அதில் தன்னை சாட்சியாக இருக்க சொன்னார்கள் என்றும், அதில் தான் கையொப்பம் செய்ததாகவும், **அ.சா.ஆ.2 பார்வை மகஜர்** என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(X) **அ.சா.10 சதீஷ் தனது சாட்சியத்தில்** சம்பவத்தை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், சின்னியம்பாளையம் அருகே தான் வேலை செய்து கொண்டிருந்தபோது விபத்து நடந்ததாக நண்பர் கூறினார் என்றும், அங்கு சென்று பார்த்தபோது அங்கிருந்த போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், அப்போது தான் விபத்தை பார்க்கவில்லை என்று கூறிவிட்டதாகவும் கூறி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

(XI) **அ.சா.11 சந்திரமோகன் தனது சாட்சியத்தில்** 30.04.2023ம் தேதியன்று தனது நிறுவனத்திற்கு சொந்தமான JCB வாகனத்தை சதீஷ்குமார் என்பவர் இயக்கி சிவகிரியில் விபத்து ஏற்படுத்தியதாக கேள்விபட்டதாகவும், போலீசார் தன்னை காவல்நிலையத்திற்கு அழைத்து தனது வண்டி விவரங்களை கேட்டார்கள் என்றும், தானும் வாகனத்தின் ஆவணங்களை போலீசாரிடம் காண்பித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:29:02 +0530

(XII) **அ.சா.12 அன்புராஜ் சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில்** 30.01.2023ம் தேதி தான் சிவகிரி காவல்நிலையத்தில் தலைமை காவலராக இருந்தபோது சிவகிரி காவல்நிலைய குற்ற எண்.69/2023 இ.த.ச.பிரிவுகள் 279, 304–A வழக்கில் கொடுமுடி வட்ட காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் பேரில் இறந்துபோன முத்துவீரன் என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக கொடுமுடி அரசு மருத்துவரிடம் ஆஜர் செய்து, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை அவர்களது உறவினர்களிடம் அடக்கம் செய்ய ஒப்படைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**(XIII) அ.சா.13 அருள்சாமி காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில்** 30.04.2023ம் தேதி தான் சிவகிரி காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது, சிவகிரி கருக்கம்பாளையத்தை சேர்ந்த முத்துவீரன் மனைவி பழனியம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று சிவகிரி காவல்நிலைய குற்ற எண்.69/2023 இ.த.ச.பிரிவுகள் 279, 304–A ன் படி **அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை** பதிவு செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

(XIV) **அ.சா.14 ஆனந்த், காவல் துணைக் கண்காணிப்பாளர் தனது சாட்சியத்தில்** 2023ம் வருடம் கொடுமுடி காவல்நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 30.04.2023ம் தேதியன்று சிவகிரி காவல் உதவி ஆய்வாளர் திரு.அருள்சாமி பதிவு செய்து மேல் விசாரணைக்காக தனது பார்வைக்கு வைத்திருந்த சிவகிரி காவல் நிலைய குற்ற எண்.69/2023 இ.த.ச. பிரிவுகள் 279, 304–A வழக்கினை தான் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வீரன் மற்றும் துரைசாமி ஆகியோர்கள் சம்பவ இடத்தை அடையாளம் காண்பிக்க அவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் **அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம்** தயார் செய்ததாகவும், மேலும் சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகள் பழனியம்மாள், மாரிமுத்து, பழனிச்சாமி, சதீஷ், மலைச்சாமி, பாலகிருஷ்ணன், நித்யா, வீரன் மற்றும் துரைசாமி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், பின்னர் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்று அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:29:09 +0530

இவ்வழக்கில் இறந்துபோன முத்துவீரன் என்பவரது பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேதத்தை பார்வையிட்டு பிரேத விசாரணை செய்து **அ.சா.ஆ.5 பிரேத விசாரணை அறிக்கை** தயார் செய்ததாகவும், இறந்துபோன முத்துவீரன் என்பவரின் இறப்பிற்கான மருத்துவ ரீதியான காரணம் அறியும் பொருட்டு அவரது பிரேதத்தை சடலக்கூராய்வுக்கு ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை அலுவல் மருத்துவ அலுவலருக்கு தலைமை காவலர் 2312 திரு.அன்புராஜ் என்பவர் மூலம் அனுப்பி வைத்ததாகவும், பிரேத விசாரணை சாட்சிகளான குமார் மற்றும் மகேந்திரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் தயார் செய்ததாகவும், பழனியம்மாள், பழனிச்சாமி, மாரிமுத்து ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 03.05.2023ம் தேதி விபத்தில் எதிரி ஓட்டிவந்த வாகனமான TN 86 F 4078 என்ற எண்ணுள்ள JCB வாகனத்தையும், மற்றொரு வாகனமான TN 54 X 2439 என்ற எண்ணுள்ள டாடா ஏஸ் என்ற நான்கு சக்கர வாகனத்தையும் விபத்தின் காரணம் அறியும் பொருட்டு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பி வைத்ததாகவும், பின்னர் எதிரி ஓட்டி வந்த வாகனத்தின் உரிமையாளரான சந்திரமோகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்சொன்ன இரண்டு வாகனங்களையும் தணிக்கை செய்து சான்று வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சிவகுமார் என்பவரை விசாரணை செய்து வாகனங்களின் தணிக்கை சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், **TN 86 F 4078 என்ற வாகனத்திற்கான தணிக்கை சான்று அ.சா.ஆ.6** என்றும், **TN 54 X 2439 என்ற வாகனத்திற்கான தணிக்கை சான்று அ.சா.ஆ.7** என்றும், விபத்தில் இறந்துபோன முத்துவீரன் என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்கிய ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையை சேர்ந்த மருத்துவர் திரு.அடைக்கலவன் என்பவரை விசாரித்து **அ.சா.ஆ.8 பிரேத பரிசோதனை சான்று** பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பிரேத பரிசோதனையின் போது வழிக்காவல் செய்த தலைமைகாவலர் திரு.அன்புராஜ் என்பவரையும் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.அருள்சாமி என்பவரையும் விசாரித்ததாகவும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279, 304-A ன்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:29:17 +0530

கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியமானது முடித்து வைக்கப்பட்டது.

6. <u>எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவல்:</u>

அரசு தரப்பு சாட்சிகளின் மேற்படி சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் மற்றும் குற்ற விபரங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் விளக்கிக் கூறி வினவியபோது எதிரி வழக்கை பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் கூறினார். மேலும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என கூறியதால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

7. எதிரி இ.த.ச.பிரிவுகள் 279, 304–Aன் கீழ் குற்றம்புரிந்துள்ளார் என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு இருப்பின் எதிரிக்கு கொடுக்கப்படவேண்டிய தண்டனை எவ்வளவு என்பதே இவ்வழக்கில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி ஆகும்.

8. <u>பிரச்சனைக்கான தீர்வு</u>:–

இ.த.ச.பிரிவுகள் 279, 304–Aன் கீழ் எதிரி குற்றம்புரிந்துள்ளார் என்பதை அ.சா.1 முதல் அ.சா.3, அ.சா.5 முதல் 9, அ.சா.11 முதல் அ.சா.14 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்தின் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே எதிரியை இ.த.ச.பிரிவுகள் 279, 304–Aன் கீழ் தண்டிக்கப்பட வேண்டும் என அரசு தரப்பில் வாதுரை செய்யப்பட்டது.

9. எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் விபத்தானது விபத்தில் அடிபட்டவர் திடீரென வாகனம் வருவதை கவனிக்காமல் ரோட்டை கடந்தபோது அவர்மீது இடிக்காமல் தவிப்பதற்காக டாடா ஏஸ் வாகனத்தை திடீரென நிறுத்தியதால் எதிரி ஓட்டி வந்த JCB வாகனம் மேற்படி டாடா ஏஸ் வாகனத்தின்மீது மோதியதாகவும், மேற்படி விபத்தானது எதிரியின் அஜாக்கிரதை மற்றும்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:29:22 +0530

கவனகுறைவால் ஏற்படவில்லை என்றும், விபத்தை நேரில் பார்த்ததாக சொல்லப்பட்டுள்ள சாட்சிகள் அ.சா.1ன் பேரில் அக்கறையுள்ள சாட்சிகள் என்பதால் எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென வாதிட்டார்.

10. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு, சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. சிவகிரி கருக்கம்பாளையத்தை சேர்ந்த சாட்சி 1ன் கணவர் முத்துவீரன் என்பவர் 30.04.2023ம் தேதி காலை 10.00 மணி சுமாருக்கு சின்னியம்பாளையம் காலனி அருகில் விளக்கேத்தி – கொடுமுடி செல்லும் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ரோட்டின் இடதுபுற ஓரமாக நடந்து சென்றுகொண்டிருந்தபோது எதிரி JCB TN 86 F 4078 என்ற வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் மற்றும் கவன குறைவாகவும் ஓட்டி சென்று சம்பவ இடத்தில் ரோட்டின் இடதுபுறம் நின்று கொண்டிருந்த TATA ACE TN 54 X 2439 என்ற வண்டியின் பின்னால் வேகமாக மோதியதில் TATA ACE என்ற வண்டி வேகமாக முன்னோக்கி சென்று மேற்படி வாகனத்திற்கு முன்னால் நடந்து சென்ற முத்துவீரன் என்பவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி முத்துவீரனுக்கு இறப்பை ஏற்படுத்தியுள்ளாரா என்பதை அ.சா.1 முதல் அ.சா.3, அ.சா.5 முதல் 9, அ.சா.11 முதல் அ.சா.14 வரையுள்ள சாட்சிகளின் சாட்சியங்கள் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும் அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பார்க்கவேண்டியுள்ளது.

11. அ.சா.1, அ.சா.5, அ.சா.6, அ.சா.7, அ.சா.8 மற்றும் அ.சா.10 ஆகியோர்கள் கேள்விநிலை சாட்சிகளாவார்கள். அ.சா.9 பார்வை மகஜர் சாட்சியாவார். அ.சா.11 ஜே.சி.பி. வாகனத்தின் உரிமையாளர் ஆவார்.

12. அ.சா.4 தனது முதல் விசாரணையில் "30.04.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு தான் தனது டாடா ஏஸ் வண்டியில் சிவகிரியில் இருந்து சாலைப்புதூர் நோக்கி வீட்டுக்கு வந்து கொண்டிருந்ததாகவும், சிவகிரி, சின்னியம்பாளையம் அருகில் தான் ரோட்டில் வந்தபோது ரோட்டை குறுக்காக ஒரு நபர் தனது வாகனத்திற்கு முன்னால்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:29:27 +0530

வந்ததாகவும், தான் அவர் அடிபடாமல் இருக்க வேண்டி தனது டாடா ஏஸ் வண்டியை இடதுபுறமாக நிறுத்திவிட்டதாகவும், தனக்கு பின்னால் வந்த ஜேசிபி வண்டி தனது டாடா ஏசின் மீது மோதி தனக்கு முன்னால் சென்ற நபரின் மீது மோதிவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். எதிரி தரப்பில் கூறப்பட்டதுபோல் விபத்தில் அடிபட்ட நபர் ரோட்டை கடக்கும்போது அவர்மீது மோதமல் இருக்க வேண்டி அ.சா.4 தனது டாட்டா ஏஸ் வாகனத்தை இடதுபுறமாக நிறுத்தியபேது எதிரி ஓட்டி வந்த ஜே.சி.பி. வாகனம் மோதியுள்ளது தெரிய வருகிறது. அ.சா.4 அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டதாலும் அரசு தரப்பிற்கு ஆதரவாக எவ்வித சங்கதியும் வெளிக்கொணரவில்லை.

13. மற்ற கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகிய இருவரும் சிவகிரி கருக்கம்பாளையத்தை சேர்ந்தவர்கள் என்பது அவர்களின் சாட்சியத்தில் இருந்து தெரிய வருகிறது. ஆனால் சம்பவ இடமானது அவர்கள் ஊரில் இருந்து சுமார் 5, 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்றும், அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் அ.சா.2 தனது ஊரான கருக்கம்பாளையம் சம்பவ இடத்தில் இருந்து எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 5, 6 கி.மீ.தூரம் இருக்கும் என்றும், அந்த இடத்திற்கு என்ன காரணத்திற்காக சென்றேன் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான்" என கூறியுள்ளார். மேற்படி அ.சா.2ன் சாட்சியத்தை கவனமாக பரிசீலனை செய்ததில் சம்பவ சமயத்தில் விபத்து நடந்த இடத்தில் டீ குடிப்பதற்காக நின்று கொண்டு இருந்தேன் என கூறியுள்ளது நம்பும்படியாக இல்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் "சத்தம் கேட்டு சென்று பார்த்தபோது முத்துவீரன் அடிபட்டு கிடந்தார்" என முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். இவற்றை எல்லாம் வைத்து பார்க்கும்போது சம்பவ இடத்திற்கு சம்பந்தமே இல்லாத அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் முரண்பட்டு சாட்சியமளித்து இருப்பதால் மேற்படி சாட்சிகள் இருவரும் அ.சா.1ன் உள்ளூர்காரர்கள் என்பதால் அவர்கள் இருவரும் அ.சா.1ன் பேரில் அக்கறையுள்ள சாட்சிகள் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:29:31 +0530

15. அ.சா.4 விபத்தில் அடிபட்டவர் மீது மோதமல் இருக்க தனது டாட்டா ஏஸ் வாகனத்தை இடதுபுறமாக நிறுத்தியதால் பின்னால் வந்த ஜே.சி.பி.வாகனம் மோதியதாக சாட்சியமளித்திருப்பதாலும், அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் அ.சா.1ன் பேரில் அக்கரையுள்ள சாட்சிகள் என முடிவு செய்து இருப்பதாலும் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுஅரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. இ.த.ச. பிரிவுகள் 279, 304–Aன் கீழான குற்றங்களை பொருத்து ஆராயும்போது அரசு தரப்பில் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை எதிரி கவனக்குறைவாக ஓட்டி வந்தார் என்றோ, மேற்படி வாகனத்தை எதிரி அதிவேகமாகவோ அல்லது அஜாக்கிரதையாகவோ ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்பதை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவேண்டும். இவ்வழக்கில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவுகள் 279, 304–A ன் கீழ் எதிரி தகாத துணிச்சல் மற்றும் கவனமற்று ஓட்டியதாக கூறப்படும் குற்றச்சாட்டை நிரூபணம் செய்யவில்லை என்ற நிலையில் அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை சரிவர நிரூபணம் செய்யாத நிலையில் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்குவது உசிதமானது என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

17. எனவே எதிரிமீதான இ.த.ச.பிரிவுகள் 279, 304–Aன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறிவிட்டது என்று முடிவு செய்து வழக்கின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக,** இவ்வழக்கில் எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவுகள் 279, 304–Aன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு தகுந்த சாட்சிய, சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறிவிட்டது என்று முடிவு செய்து எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவுகள் 279, 304–Aன் கீழ் குற்றவாளி இல்லை என எதிரியை குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:29:36 +0530

தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதிக் கொடுத்த பிணைப் பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு ஆஜர்படுத்தப்படவில்லை.

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27ம் நாள் வெள்ளிக்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:29:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:-

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி.பழனியம்மாள் | – புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.மாரிமுத்து | |
| அ.சா.3 | திரு.பழனிச்சாமி | |
| அ.சா.4 | திரு.மலைச்சாமி | |
| அ.சா.5 | திரு.பாலகிருஷ்ணன் | |
| அ.சா.6 | திருமதி.நித்யா | |
| அ.சா.7 | திரு.குமார் | |
| அ.சா.8 | திரு.மகேந்திரன் | |
| அ.சா.9 | திரு.வீரன் | |
| அ.சா.10 | திரு.சதீஷ் | |
| அ.சா.11 | திரு.சந்திரமோகன் | |
| அ.சா.12 | திரு.அன்புராஜ் | – சிறப்பு உதவி ஆய்வாளர் |
| அ.சா.13 | திரு.அருள்சாமி | – காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா.14 | திரு.ஆனந்த் | – காவல் ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**:

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 30.04.2023 | புகார் |
| அ.சா.ஆ.2 | 30.04.2023 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3 | 30.04.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 30.04.2023 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 01.05.2023 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 03.05.2023 | TN 86 F 4078 என்ற வாகனத்திற்கான தணிக்கை சான்று |
| அ.சா.ஆ.7 | 03.05.2023 | TN 54 X 2439 என்ற வாகனத்திற்கான தணிக்கை சான்று |
| அ.சா.ஆ.8 | 01.05.2023 | பிரேத பரிசோதனை அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்**:– – இல்லை –

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:– – இல்லை –**

**குறிப்பு**

1. வழக்கு விசாரணைக் காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்தார்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:29:44 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**C.C.No.21/2023**

| **S.No** | FORM ANNEXURE UNDER RULE 106 OF CRIMINAL RULE OF PRACTICE **Description of Accused** | |
|---|---|---|
| 1 | Name of the Police Station and the Crime Number of the Offence | The Inspector of Police, Sivagiri Police Station, Crime No.69/2023 Under Section 279, 304-A of IPC |
| 2 | Name | Sathish |
| 3 | Father's Name | Arumugam |
| 4 | Occupation | Driver - Car |
| 5 | Residence | 4/38 Kundan Street, K.Mettupalayam, Kaveripatti, Agraharam, Salem Dt. |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:29:54 +0530

| | | |
|---|---|---|
| 6 | Age | 26/2023 |
| 7 | Date of Occurrence | 30.04.2023 |
| 8 | Date of Complaint | 30.04.2023 |
| 9 | Date of Apprehension | 03.05.2023 |
| 10 | Date of Release on bail | Station Bail on 03.05.2023 |
| 11 | Date of Commitment | -- |
| 12 | Date of Commencement of trial | 14.09.2023 |
| 13 | Date of Closure of trial | 04.02.2026 |
| 14 | Date of Sentence or Order | 27.03.2026 |
| 15 | Date of Service of copy of Judgment or finding on Accused | Acquitted |
| 16 | Explanation of delay | No Delay |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.27 17:29:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.